விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 24 துல் ஹஜ்ஜா: பிறை: 13 இதழ்: 115
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 07-06-1990

## இந்திய கடற்றொழிலாளர் விசாரணையின் பின் திருப்பி அனுப்பப்பட்டனர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடலில் சட்ட விரோதமாக மீன் பிடிக்க முனைந்த இந்திய இழுவைப் படகுக் கடற்றொழிலாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தென்னிந்தியா தொண்டியைச் சேர்ந்த ஐந்து இழுவைப் படகுகளில் வந்த பத்தொன்பது இந்தியக் கடற்றொழிலாளர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (133)

## இந்திய - இலங்கை கடல் எல்லையில் ரோந்து அதிகரிப்பு!

(சென்னை)

இலங்கையிலிருந்து போராளிகள் இந்தியாவுக்குள் தக்கஅனுமதியின்றி நுழைவதைத் தடுக்கும் பொருட்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பகுதிகளில் இந்

(8ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் மீண்டும் தேர்தல் நடத்த வசதியாக சட்ட மூலம்: அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு மாகாண சபை இயங்காமல் இருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பரிசீலனை செய்த அமைச்சரவை அங்கு மீண்டும் தேர்தல் நடைபெறுவதற்கு வழிவகுக்கும் சட்டமூலம் ஒன்றை உடனடியாகக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்துள்ளது. சட்ட மாஅதிபரினாலும், சட்ட வரைஞர்களாலும் தயாரிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.**

அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் திரு. ரஞ்சன் விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

சட்டமூலம் மாகாண சபையைக் கலைப்பதற்குரிய அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குமா? என்று நிருபர் ஒருவர் இந்த மாநாட்டில் கேட்டபோது,

ஜனாதிபதிக்கு அந்த அதிகாரம் தேவையில்லை என்றும், மீண்டும் மாகாண சபையை இயங்கச் செய்வதற்காகவே சட்டமூலம் கொண்டுவரப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் தேர்தல் நடைபெறுமானால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்களா என்று கேட்கப்பட்டபோது—

ஆயுதங்களை வைத்துக் கொண்டு தேர்தலை ஒருபோதும் நடத்தமுடியாது என்பதைத் தாம் எப்போதும்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபையைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கும் விதமாக மாகாணசபை சட்டத்திலும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சட்ட அமைப்புக்களிலும் தேவையான திருத்தங்களைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

## கடத்தல் பொருள்களுடன் ஐவர் கைது!

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இரண்டு கண்ணாடி இழைப் படகுகளில் சட்ட விரோதமாகக் கடத்திவரப்பட்ட 89 பொதிகள் அடங்கிய வெங்காயம், 20 பொதிகள் அடங்கிய எவர்சில்வர் பொருள்கள், 15 பொதிகள் அடங்கிய ஜவுளித் துணிகள், சேலைகள், சாரங்கள், தலைமயிர் சூடிவகைகள் ஆகியவை கடந்த 4ம் திகதி இரவு கச்சதீவு கடல்பகுதியில் வடபிராந்திய கடற்படை ரோந்துப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன. இரண்டு கடத்தல்படகு

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை லேசானதல்ல! - ரஞ்சன்

(கொழும்பு)

சினமடையக்கூடிய கேள்விகள் கேட்கும் பத்திரிகையாளர்களைச் சிறைக்குள் தள்ளப் போவதாகத் தாம் எச்சரித்திருப்பது மலசாக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய எச்சரிக்கையல்ல எனப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்திருக்கிறார்.

ஆயுதங்களைப் பயன்படுத்தும் குற்றவாளிகளும் இருக்கின்றனர். பேனாவைப் பயன்

(8-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் மரங்கள் வெட்டத் தடை!

(வேலணை)

தீவுப் பகுதியில் உள்ள எந்தமரங்களையும்வெட்டுவதற்கு தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி தடை விதித்துள்ளது.

இயற்கை வளங்கள் அனாவசியமான முறையில் அழிக்கப்பட்டு வருவதை தடைசெய்யும் நோக்குடனேயே இத்திட்டம் உடனடியாக அமுல்படுத்தப்பட்டுள்ள தெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லொறி விபத்தில் சாரதி பலி

(கிளிநொச்சி)

நேற்றுக்காலை முருகண்டி கொக்காவில் பிரதான கண்டி வீதியில் லொறி விபத்தில் அரியாலையைச் சேர்ந்த தியாகராசா என்னும் லொறிச் சாரதி பலியானார்.

அவரது சடலம் மரணவிசாரணைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் நால்வர் படுகாயம் அடைந்து யாழ், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். பிரஸ்தாப லொறி அரியாலை கண்ணாடித் தொழிற்சாலைக்குச் சொந்தமானதாகும். (83)

## 360 கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் இதுவரை இலவச விநியோகம்

(மானிப்பாய்)

கடந்த ஆறு நாட்களில் 360 கடவுச் சீட்டு விண்ணப்பப்படிவங்கள் யாழ். செயலகத்தில் இலவசமாக விநியோகிக்கப் பட்டுள்ளன.

கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் விடுத்த பணிப்புரையைத்தொடர்ந்து கடந்த 30-ம் திகதியிலிருந்து நேற்று வரை ஆறு வேலைநாட்களில் 360 விண்ணப்பப் படிவங்கள் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

இவற்றைப் பெறவருபவர்களுக்கு அவர்களின் தேசிய அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்தபின் விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மூலையில் பெயர் குறிக்கப்பட்ட பின்பே வழங்கப்படுகிறது. (71)

## யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10ம் திகதி கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடுசெய்திருக்கிறது

யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் அன்றைய தினம் காலை பத்து மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

பாடசாலைகளின் பிரச்சனைகளும் எதிர்கால நடவடிக்கைகளும் என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும், கல்வித் திணைக்கள உயரதிகாரிகளும் இதனை ஏற்பாடு செய்திருக்கின்றனர். பாடசாலை அதிபர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோரும் இதில் கலந்து கொள்வார்கள்.

## இரண்டு வருடங்களுக்கு முன் காணமல் போன கடற்றொழிலாளர் ஆந்திராவில் இருப்பதாகத் தகவல்!

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளத்திலிருந்து 1988-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மீன்பிடிக்கச் சென்ற இரு கடற்றொழிலாளர்கள் ஆந்திரப்பிரதேச கடற்றொழிலாளர்களால் காப்பாற்றப்பட்டு, அங்கிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது சபாபதிப்பிள்ளை விஜயகுமார், செல்லையா யோகராஜா ஆகிய இருஇளைஞர்களும் கடற்றொழிலுக்குச் சென்று காணமற் போயிருந்தார்கள். உறவினர்கள் ஐந்து நாட்கள் பலத்த தேடுதலின் பின்பு அவர்கள் இறந்து விட்டார்கள் எனக் கருதி தேடுதல் முயற்சியை கைவிட்டார்கள்.

நீண்ட நாட்களின் பின்பு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ம் திகதி காணமற் போன இருகடற்றொழிலாளர்களிடமிருந்து கடிதம் அவர்

(8ம் பக்கம் பார்க்க)

## மணமகள் தேவை

கோவிய இனத்தைச் சேர்ந்த தோட்டவேலை செய்பவரும் வியாபார ஸ்தாபனத்தில் கடமை புரிபவரும், தீய பழக்கம் அற்றவருமாகிய 25 வயதுடைய தமது மகனுக்கு பெற்றோர் நல்ல குணமுடைய மணமகளைத் தேடுகிறார்கள். சீதனம் எதிர்பார்க்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 3936, மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். [சி 3936]

## ஆங்கில நூல்

ஆங்கில மொழியில் பேச வாசிக்க துணைநூலாக வெளிவந்துவிட்டது. T. M. அன்ரனிப்பிள்ளை L. L. B. அவர்கள் எழுதிய Easy English Part (1- To-4) ஈசி இங்கிலீஸ்பாகம் 1 முதல் 4 வரை குறைந்த விலையில் நிறைந்த பயன்பெற நான் வெளியீடுகளை படியுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, "நான்", வசந்தகம், கொழும்புத்துறை. (சி 3933)

## புலமைப் பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5 இற்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனியும் பி. ப. 3-00 - 6-00 வரை நடைபெறுகின்றது. எதிர்வரும் 9-6-90இல் 3 ஆம் தொடர் நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். உடன் பதிவுசெய்யவும். எலைற் இன்ஸ்ரிரியூட் 99, மானிப்பாய் வீதி, வண்ணார் பண்ணை தபால் நிலையம் முன்பாக யாழ்ப்பாணம். (சி-3950)

## விற்பனைக்கு

தந்தை Rich Backக்கும், தாய் அல்சேஷன் நாய்க்கும் பிறந்த புதிய இன தடுப்பூசி போடப்பட்ட 1½ மாதக்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; இ. மகாதேவா 140, செல்லர் வீதி, கல்வியங்காடு. (சி-3939)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இராசி பலன்

07 - 06 - 1990
வியாழக்கிழமை

மேடம்: நீசர் நட்பு, சுபகாரியச் சித்தி, இனசனவரவு.
இடபம்: பிரையாண அலைச்சல், பணக்கஷ்டம், மறதி.
மிதுனம்: கடவுள் பக்தி, தனலாபம், நன் முயற்சி, பதவியுயர்வு.
கடகம்: வைத்தியம், அற்பர்நேசம், திடசித்தம்.
சிங்கம்: சோம்பல், இடமாற்றம், தேக பீடை.
கன்னி: பொருள்சேர்க்கை சோம்பல், இடமாற்றம்.
துலாம்: குழப்பம், நிதானம், தேகபீடை.
விருச்சிகம்: தூரத்துச் செய்தி, நீசர்கள் உதவி, சமாதானம்.
தனுசு: புதிய திட்டம், வீண்விரயம், குடும்பசுகம்.
மகரம்: சுபகாரியச்செலவு, உஷ்ண வியாதி, கடன்.
கும்பம்: பொய் பேசுதல், ஆலயதரிசனம், இலாபம்.
மீனம்: தேகபீடை, நற்சிந்தனை, செல்வாக்கு.

இ.மகாதேவா

## அரங்கிசை நிகழ்ச்சி

(உடுவில்)
யாழ்ப்பாணம் பாரதிகான சபாவின் ஆதரவில் வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மாவின் இல்லத்தில் நடைபெற்ற பிரதி மாத அரங்கிசை நிகழ்ச்சியில் இம்முறை திருமதி மங்களா ஸ்ரீதரனின் இசைக்கச்சேரி நடைபெற்றது. பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா வயலின், செல்வன் வ. இராமேஸ்வரன் மிருதங்கம் பக்கவாத்தியங்களாக வாசித்தனர்.

வளரும் கலைஞர் இசைஅரங்கில் மாணவிகளின் பாட்டுக்கச்சேரி, செல்வி சரஸ்வதி நடராசாவின் வீணை இசை, ஸ்ரீகிருஷ்ண கானசபா மாணவியரின் பாட்டுக் கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (109)

## தேவை

கண்ணுடித் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு இளைஞர்களும் பெண்களும் தேவை. சம்பளத்துடன் இதர சலுகைகளும் வழங்கப்படும்.

நேரில் வரவும்.

**த பெனின்சுலா குறூப்**
**மகேந்திரா**
**கண்ணுடித்தொழிற்சாலை,**
அரஸ்கோ கட்டடம், 163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(ஏ 788)

## தேவை

உடைந்த வெள்ளை போத்தல் ஓடுகள் தேவை. எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டுவந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும்.

எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களிலேயே போத்தல் ஓடுகளை சேகரிக்கலாம். தகுதியுள்ளவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும்.

போத்தல் ஓடுகள் சேர்ந்தவுடன் எமக்கு அறிவித்தால் உடனடியாக வந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வோம்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே வேறு மாவட்டங்களில் உள்ளவர்களும் ஓடுகளை சேகரித்து எமக்கு அறிவித்தால் நாம் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

**த பெனின்சுலா குறூப்**
**மகேந்திரா**
**கண்ணுடித்தொழிற்சாலை,**
அரஸ்கோ கட்டடம், 163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(ஏ 787)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் பொன்னர் - நாகமணி (மண்டோர்)**

தோற்றம்: 23-02-1909 மறைவு: 08-05-1990

08-05-1990 இல் சிவபதமடைந்த எங்கள் தெய்வத்தின் மரணச்சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்கு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உளப் பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று(07-06-1990 வியாழன்) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள்.

"இராச மஹால்",
கலைவாணி வீதி,
சித்தன்கேணி.
(சி-3930

## கவிஞர் சத்தியசீலனின் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
கவிஞர் சத்தியசீலனின் எழுத்துலக வெள்ளி விழா மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெறும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் விழா நடைபெறும்.

இன்று காலை 9 மணிக்கு கவிஞர் சத்தியசீலனின் புத்தக சித்திரக் கண்காட்சியை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் மருதனுமடக் கோட்டக்கல்வி அதிகாரியும் உதவிக்கல்விப் பணிப்பாளருமான ஆர். கே. குலசேகரம் திறந்துவைப்பார். பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் கவிஞர் இ. முருகையன், சத்தியசீலனின் இலக்கிய பாலர் பா பத்திரிகைப்பாடல் வானொலி நாடகம் பற்றிச் சிறப்புரை ஆற்றுவார்.

கண்காட்சியில் முதலாவது புத்தகத்தை 'மில்க்வைற்' அதிபர் திரு.க. கனகராசாவும் இரண்டாவது புத்தகத்தை சிறீலங்கா புத்தகசாலை அதிபர் திரு. கந்தசாமியும் பெற்றுக் கொள்வார்கள். காட்சியில் கவிஞர் சத்தியசீலனுக்கு மஹாகவி எழுதிய கவிதைக் கடிதங்களும் இடம்பெறும்.

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம் இக் கண்காட்சியை ஒழுங்குசெய்துள்ளது.

தொழில்நுட்ப ஆசிரியர்களான ஏ. நடராஜசுந்தரம், எஸ். சிவநேசன் ஆகியோர் கண்காட்சிக்கு அமைப்பாளராக உள்ளனர்.

## ஆலய உற்சவம்

[யாழ்ப்பாணம்]
அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற இருக்கிறது. [153]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
08 - 12 - 1926

மறைவு:
07 - 06 - 1986

திதி:
07 - 06 - 1990


**ஆ. செந்தில்நாயகம்**

காலம் மாறினாலும் நம்
கவலைகள் ஆறுமோ
நெஞ்சிருக்கும்வரை உம்
நினைவிலே நாம் இருப்போம்.

ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

83/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-3944)

## 4-ம் ஆண்டுநினைவு அஞ்சலி



**வீரவேங்கை தீசன்**
(சின்னத்துரை மனோகரன்)

ஈழமண்ணில்: 28-05-1965 ஈழநெஞ்சில்: 7-6-1986

வீரவேங்கையே விடுதலையின் சின்னமே - அன்று
பரவிப்பாஞ்சானில் பதற்றமின்றிப் போரிட்டாய்
பாசக்கயிறுதனை பாவியவன் வீசி விட்டான்
தீசன் ஓய்ந்து விட்டான் தேசமே பதறியது
நீ சிந்திய குருதி உறைந்தது எம் சிந்தையில்

மறவோம் உன் நினைவை மலர்க தமிழீழம்
உனது ஆத்மா சாந்தியடைக.

நண்பர்கள்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.
(சி-3951)

### மணிவாக்கு

இதயத்தில் புனிதமான இடத்தில் மறைத்து வைக்கப்பெற்றுள்ள புனிதமான தீ அமரர் உலகத்தைக் காட்டும்.

—ஆன்ரோர் வாக்கு

## நமது நோக்கு

# பர்மா தேர்தல்
## புதிய அத்தியாயம் ஆரம்பம்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வீசிய அலை இப்போது பர்மாவிலும் வீசியிருக்கிறது.

அங்கு தேர்தல் நடைபெற்றிருக்கின்றது, 32 வருட இராணுவ ஆட்சிக்குப்பின், 22 மில்லியன் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள், புதிய அரசு ஒன்றினை அமைத்திட.

ஜனநாயகத்துக்கான தேசியக்கட்சி (National Leaqe for Democracy) தேர்தலில் வெற்றிபெற்றிருக்கின்றது.

எமது நாடுபோல, பர்மாவும் பல ஆண்டுகளாக அந்நியர் ஆட்சிக்குள் அடிமைப்பட்டு அல்லலுற்றது.

அந்த நாட்டுச் சுதந்திரத்திற்காக, ஆங்-சான் தலைமையிலான பாசிச எதிர்ப்புச் சுதந்திரக்கட்சி நீண்ட போராட்டத்தை நடத்தியது; 1946-ல் வெற்றியும் கண்டது.

அதன் பயனாக 4-1-1948-ல் சுதந்திரம் பெற்றது; ஆங்-சான். தலைமையில் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது; புதிய அரசியல் திட்டம் அமைப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடந்த வேளையில் ஆங்-சானும் அவரது முக்கிய சகாக்களும் கொலை செய்யப்பட்ட சோகச் சம்பவம் நடைபெற்றது.

யூ-நூ தலைமையில் ஆட்சி நடைபெற்றது. உலகிலேயுள்ள மூன்று ஹீனயான பௌத்த நாடுகளில், பர்மா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையைப் போல, அங்கும் பௌத்தத்திற்கே முதலிடம்; உலகின் ஏனைய நாடுகளுடனான தொடர்புகளைக் குறைத்து 'தனித்து' வாழ முற்பட்டது. விளைவு? பொருளாதாரச் சிக்கல்கள்!

பிரதமர் யூ-நூ அமைச்சர் குழுவில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த நீ-வின் இராணுவப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

சுமார் 30 வருடங்கள் இராணுவ ஆட்சி நடைபெற்றிருக்கிறது. அவ்வப்போது ஏற்பட்ட எதிர்ப்புக்கள் எளிதாக அடக்கப்பட்டன.

ஆனால், 1988 செப்டெம்பரில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் சமாளிக்க முடியாதவை.

உலக நாடுகளின் கண்டனங்களும் வலுத்தன. அளித்துவந்த பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்தியது. ஜப்பானும், ஜேர்மனியும் உதவிகளைச் சில காலத்திற்குத் தடுத்து வைக்கப்போவதாக அறிவித்தன. பிரிட்டனும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் உதவியை நிறுத்தப்போவதாக எச்சரித்தன.

விளைவு? கிளர்ச்சிகளிலிருந்தும், பொருளாதாரச் சீரழிவுகளிலிருந்தும் நாடு மீளவேண்டுமானால் தேர்தலை நடாத்திப் புதிய அரசை அமைக்கவேண்டிய நிலை உருவாகியது.

பல எதிர்க்கட்சிகள் கிளர்ச்சியிற்பங்கு பற்றினாலும் ஜனநாயகத்திற்கான தேசியக் கட்சிக்கே மக்கள் வாக்களித்துள்ளார்கள். அக்கட்சியின் தலைவர் யார்?

தேசியத் தலைவராக மதித்துப் போற்றப்பட்ட ஆங்-சானின் மகன் ஆங்-சான்-கீ அவர்களே!

ஆனால், அவரால் தேர்தலிற் போட்டியிடமுடியவில்லை. காரணம் என்ன? அவர் ஐரோப்பியப் பௌத்தரான மைக்கேல் எவிக் என்பவரைத் திருமணம் செய்தவர்: கணவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பேராசிரியர்.

ஆட்சிநடத்திய இராணுவத்தினர் அமைத்த கட்சி தேர்தலில் தோல்வி கண்டிருக்கின்றது.

ஆங்-சான்-கீ ஆட்சிப்பொறுப்பை ஏற்பாரா? ஆட்சிமாற்றம் சுமுகமாக நடைபெறுமா? முழு உலகமே பர்மாவைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

# அடைந்தவர்க்கருள்செயும் அருள் மாநிதியே!

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

பதமலர் பணிவேன் கௌரிமணாளா - உன்தன்
பதமலர் அருள்வாய் பரமதயாளா - என்றும்
(பதம......)

அனுபல்லவி

அடைந்தவர்க் கருள்செயும் அருள்மாநிதியே - கடல்
கடைந்தவர்க் கருள் செய்த அருமாமணியே - ஐயா
(பதம......)

சரணம்

துதிப்பவர் இடர்களைத் தொலைத்திடுபவனே - மனம்
பதிப்பவர் உளங்களில் நிலைத்திடுபவனே - புகழ்
படிப்பவர் வினைகளைக் கலைத்திடுபவனே - பதம்
பிடிப்பவர் மனங்களில் திளைத்திடுபவனே - நிதம்
(பதம......)

"முருகு"

(இன்று திருக்கேதீச்சரத்தில் மௌனோற்சவம்)

# யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்கள் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கூடி யாழ். மாவட்டப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துள்ளார்கள். இதன் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சி. தர்மலிங்கம் (வடமராட்சி), உப தலைவர் சு. நடராசா (சாவகச்சேரி), செயலாளர் சி. தயாபரன் நல்லூர்) உப செயலாளர்கள்: ம. ஞானசம்பந்தன் (நல்லூர்), க. கனகலிங்கம் (யாழ்ப்பாணம்), பொருளாளர்; ப. மோகேந்திரன் (வேலணை), இதழாசிரியர்: பு. சிறீஸ்கந்தராசா (கோப்பாய்) ஆகியோருடன். யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளிலுமிருந்து 3 பேர் வீதம் மொத்தம் 42 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களின் விசேட கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். முகாமைத்துவ கல்வியதிகாரியும் பயிலுநர் ஆசிரியர் (யாழ். மாவட்டம்) இணைப்பதிகாரியுமான திரு. நா. தணிகாசலம்பிள்ளை இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# 1989-ம் ஆண்டுக்கான அபிவிருத்திதிட்ட வேலைகளை
## ஆகஸ்டில் பூர்த்தி செய்ய பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1989ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்ட வேலைகள் யாவும் எதிர்வரும் ஆகஸ்ட் 31ந் திகதிக்கு இடையில் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்று யாழ், அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

1990ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட அபிவிருத்திட்டங்கள் அனைத்தும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டும்.

ஒதுக்கப்பட்ட நிதிகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முற்றாக ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் அவற்றின் நிதிகள் வேறுதிட்டங்களுக்கு மாற்றப்படவிருக்கிறதாக தெரியவருகிறது. (153)

# சம்பளம் வழங்கப்படாததை எதிர்த்து சட்ட நடவடிக்கை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அங்கத்தவர்களுக்குக் கடந்த மாதம் முதல் சம்பளம் வழங்கப்படாமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜனுப் சேகு இஸாதீன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் சட்டபூர்வமான அங்கத்தவர்களுக்கு உரித்தான சம்பளத்தினை வழங்காதமை அரசின் அப்பட்டமான பாரபட்சம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான இச்செயலினால், மாகாண சபை உறுப்பினர்கள் மட்டுமல்ல அவர்களின் மெய்ப்பாதுகாவலர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாகாண சபை முன்னாள் போக்குவரத்து அமைச்சர் ஜனுப் அபுயூசுப் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை இயங்காத நிலையில், சபை அங்கத்தவர்களினதும், மெய்ப் பாதுகாவலர்களினதும் சம்பளத்தை மார்ச் மாதம் 1-ம் திகதி முதல் நிறுத்தும்படி தமக்கு அரச மேலிடம் உத்தரவிட்டதாக வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (அ)

# பருத்தித்துறை, ஊர்காவற்றுறை
## உ. அ. அதிபர் பிரிவுகளில் காணிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணியற்ற 473 பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணி அற்ற 93 பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் மேற்படி இடங்களில் காணிக் கச்சேரிகள் நடைபெற்றன.

வேலணை, மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் காணிக் கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன, யாழ். மாவட்டத்தில் மேற்படி ஆறு இடங்களிலே அரசுக்குச் சொந்தமான காணிகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (153)

# 48 ஏக்கர் நெற்காணி 18-ம் திகதி கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தின் வளர்ச்சிக்காக சேர். பொன். இராமநாதனின் சொத்தில் இராமநாதபுரத்திலுள்ள 48 ஏக்கர் நெற்காணியை கையளிக்க முன்வந்துள்ளார்கள்.

எதிர்வரும் 18- திகதிவைபவ ரீதியாக மேற்படி காணிகையளிக்கப்படவிருக்கிறது.

சேர். பொன். இராமநாதன் சொத்துக்களின் பாரமரிப்புக்குழுவில் இருந்து முன்னாள் வவுனியா அரச அதிபர் திரு. சிவஞானம் கிளிநொச்சி கமநல சேவைப் பிரிவு முன்னாள் அலுவலர் திரு. விஜயரத்தினம் ஆகியோரும், யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் க. துரைராஜா, பதிவாளர் திரு. எஸ். பரமேஸ்வரன் பேராசிரியர் வி. நித்தியானந்தன், பேராசிரியர் எஸ். கந்தையா, கலாநிதி எஸ் மோகனதாஸ், வேலைத்தள பொறி

(8-ம் பக்கம் பார்க்க)

### பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் அருள் மொழி மணிகள்

[1] பணம் வந்து போகும்.
நல்லொழுக்கம் வந்து வளரும்.
[2] காலத்தின் விரயம் வாழ்வின் நாசம்.
[3] இன்பம் என்பது இரு துன்பத்தின் இடைவழியே

# விசேட ஏற்பாடு

(அச்சுவேலி)

உணவுமுத்திரைக்கு உரிய உணவுப்பொருட்களை மக்களுக்கு வசதியான முறையில் விநியோகிப்பதற்கு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

உணவுப்பொருள் விநியோகத்திற்கு வசதியாக சங்கத்தின் சகல கிளை நிலையங்களும் சங்க விடுமுறை தினங்கள் மற்றும் லீவு நாட்களிலும் திறந்து வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (74)

## பலதும் பத்தும்

### மோதிரம்...!

அலங்காரத்திற்கா மோதிரம் அணிகிறோம்...? முற்காலத்திலே பேய், பிசாசுகளை விரட்டத்தானும் அதனை அணிந்தார்கள்.

முற்காலமா...? மோதிரப் பாவனை எவ்வளவு காலவரலாற்றினைக் கொண்டிருக்கிறது?

கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன் பயன்பட்ட மோதிரங்கள் 'மியூசியத்தில்" -அரும்பொருட் காட்சியகத்தில்-உள்ளனவாம்...!

ரோமில் இரும்பாலான மோதிரங்களை அணிந்திருக்கிறார்கள். அடிமைகள் இரும்புமோதிரங்கள் அணிய வேண்டுமென்ற கட்டாயம் இருந்ததாம்.

அப்படியானால்...? திருமணத்தின் போது மோதிரம் மாற்றுகிறோமே, ஆளுக்காள் அடிமையாவதன் சின்னமோ? நல்லவேளை...! அது ஒரு வழிப்பாதையாக அமையவில்லை; அதாவது ஆண் பெண்ணுக்கு மாத்திரம் மோதிரம் அணிவதோடு நின்றுவிடவில்லை...!

திருமண மோதிரம் அணியும் வழக்கமே கி. பி. 860க்குப் பின்தான் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

தற்போது... சோதிடர்களின் ஆலோசனைப்படி... கிரகங்களின் சாந்திக்காக... குறிப்பிட்ட சிலவகைக் கற்கள் பதித்த மோதிரங்களை அணிகிறார்கள்!

நரம்புத்தளர்ச்சி போன்ற சிலவகை நோய்களைத் தடுக்க... மூலிகை மோதிரங்களும் பாவனையில் உண்டு.

இன்று ... சயனைட் குப்பிகள்! அன்று... உயர் அரசியல் பீடத்தினர்... பகைவர்களிடம் சிக்கும் நிலை ஏற்பட்டால்...? மோதிரத்திலே விஷத்தை வைத்திருந்தார்களாம்...!

வாணி

# அளவெட்டி கும்பழாவளைப்பிள்

# ★ சிறப்பு

## மாருதப்புரவீக வல்லியின்

## குதிரை முகத்தை மாற்றிய


## கும்பழாவளை விநாயகன்

'விநாயகனே வெவ்வினையை
வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான்- விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின்
கனிந்து.

### தல வரலாறு

மாருதப்புரவீக வல்லியாம் சோழ அரசிளங்குமாரி தனது குதிரை முகம் நீங்கப்பெருது, கீரிமலையில் தீர்த்தமாடி மாவிட்டபுரத்தில் முருகப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து, குதிரைமுகம் நீங்கப்பெற்றும் தனது நினைவிற்கும் பார்வைக்கும், அக்குதிரைமுகம் நீங்கப் பெருமையால், முதற்கண் விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்யாததன் காரணமே இது வெனப் பெரியோர் கூற, அக்குறையினைத் தீர்ப்பான் வேண்டி ஏழு விநாயகராலயங்களைப் பிரதிஷ்டை செய்தான். அவையாவன கொல்லன் கலட்டி, வறுத்தலை, அளகொல்லை, கும்பழாவளை பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பன. இவ்வேழுதலங்களுள் மத்திய ஸ்தானமாய் விளங்கும் கும்பழாவளைப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்தபோது அவளது குதிரை முகம் பார்வைக்கும் நினைவுக்கும் முற்ருக நீங்கிய தன்மையால் இவ்விடத்திற்கு (மா+இழி+திட்டி) மாவிழிதிட்டி எனப் பெயர் வந்தது என்றும் இத்தலத்துக்குத் தென்கிழக்கு மூலையில் வயலும் குளமும் இருந்ததாயும், இக்குளத்திற்கு குமாரத்தி குளம் எனறபெயர் எனவும் (இவை தற்காலத்தில் குடியிருப்புகளாக மாறிவிட்டன) வரலாறுகள் கூறுகின்றன.

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசர் வசம் இருந்த காலத்தில் ஏனைய சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டது போல் இவ்வாலயமும் அழிக்கப்பட்டது. அச்சமயத்தில் மூல விக்கிரகம் அருகில் உள்ள அன்பர் ஒருவரால் பாதுகாக்கப்பட்டு ஒருமரப் பொந்தினுள் ஒளித்து வைக்கப்பட்டு பூசிக்கப்பட்டது. 1811-ம் ஆண்டளவில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது இவ்வாலயக் கர்ப்பக்கிரகமும். மகாமண்டபமும் கட்டப்பட்டன, பழைய




மூலமூர்த்தியே ஸ்தாபிக்கப்பட்டது.

1948-ம் ஆண்டு இவ்வாலய நிர்வாகம் ஏழுபேர் கொண்ட தர்மகர்த்தா சபையினரால் பொறுப் பேற்கப்பட்டது. தர்மகர்த்தா சபையினரின் நிர்வாகத்தில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காலம் பொற்காலமாகும். தர்மகர்த்தா சபை பொறுப்பேற்றபின் இவ்வாலயம் மூன்று முறை புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. 1991-ம் ஆண்டில் நான்காவது கும்பாபிஷேகம் செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1953-ம் ஆண்டு இராச கோபுரமும், மணிக்கூட்டுக் கோபுரமும் ஆரம்பிக்கப்பட்டு 1962-ம் ஆண்டு அவை பூர்த்தியாக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தின் மூன்று தேர்களும் ஒரே வரிசையில் நிற்கக் கூடியதாகவும், மூன்று தேர்களும் ஒரே நேரத்தில் மூர்த்திகளை ஏற்றுவதற்கும் வசதியாக ஒரு அழகிய தேர்மண்டபமும், சாதாரண காலங்களில் மூன்று தேர்களையும் பாதுகாக்கக்கூடிய வகையில் 50 அடி நீளமான ஒரு பாதுகாப்பு மண்டபமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விநாயகப் பெருமானுக்குரிய தேர் 1913 ம் ஆண்டளவில் செய்யப்பட்டதாகும். அம்மன் திருஉலாவுக்குரிய சித்திரத்தேரும் 1913-ம் ஆண்டளவில்செய்யப்பட்டதாகும். முருகப்பெருமான் திரு உலா வருவதற்காக 1920 ம் ஆண்டளவில் சித்திரத்தேர் செய்யப்பட்டதாகும். விநாயகப் பெருமானும், அம்மனும் எழுபத்தேழாவது வருடமாகவும். முருகப்பெருமான் எழுபதாவது வருடமாகவும் இன்று தேர் ஏறிப் பவனிவந்து மெய்யடியார்கள் சிந்தை எல்லாம் குளிரவைத்து அருள்பாலிக்கிருர்கள்

ஆலயத்தின் உள்வீதியில் விநாயகப்பெருமானின் 32 தோற்றங்கள் உருவமாக வரையப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளது.

எந்தவொரு ஆலயத்திலும் காணமுடியாத சிறப்பம்சமாகும். மகாமண்டபச் சுவர்களில் அழகிய ஆலய வரலாற்றுச் சித்திரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் முகப்பில் அழகியசிறிய கோபுர முகப்பு வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாலயத்தில் பூர்வ பக்கச் சதுர்த்தியும், அபரபக்கச் சதுர்த்தியும் மாதந்தோறும் சங்கிராந்தி தீர்த்தமும், பூரணை தோறும் ஸ்ரீசங்கர பூசையும், அம்பாள், திருவுலாவும், நவராத்திரி தினங்கள், கந்தசஷ்டி, திருவிழாக்கள், பிள்ளையார் கதை, கார்த்திகைத்தீபம், திருவெம்பாவை, தைப்பூசம், பங்குனி உத்தரம், நடேசர் அபிஷேகங்கள் ஆறு ஆகிய உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன. வருடந்தோறும் வைகாசி மாதப் பூரணைக்குத் தீர்த்தோற்சவம் அமையும் வகையில் கொடியேற்றப்பட்டு 11 திருவிழாக்கள் நடைபெறுகின்றன. வருடந்தோறும் பங்குனி உத்தரத்தன்று சுவாமி திருக்கல்யாணம் வரக்கூடிய முறையாக கந்தபுராணப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டு வைகாசிமாத அமாவாசைக்கு முன்னர் புராணபடனம் பூர்த்தியாகும். புராணப்படிப்பின் போது வரும் விசேட படிப்புகளுக்கு உபயங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் பக்தி சிரத்தையோடு வழிபட்டு வந்த மெய்யடியார்களுக்கு வேண்டிய அருள்பாலித்து மெய்யடையாளங்களாக எண்ணிறந்தஅற்புதங்களை நிகழத்தி அனுக்கிரகிப்பவர் கும்பழாவளை விநாயகப்பெருமான்மெய்யன்பர் ஒருவர் அபிஷேகத்துக்கு இளநீர் கேட்டபோது அதனைக்கொடுக்க மறுத்தவர் சொந்தக்காரன். அதனுல் அவ்வன்பர் மனம் நொந்து கொண்டு சென்று விட்டார் மறுநாட்காலை ஒரு குலை இளநீரில் பாதி பச்சை நிறமாகவும், பாதி சிவப்பு நிறமாகவும் இருப்பதை சொந்தக்காரன் கண்டார். இதைக்கண்டு பதை பதைத்த சொந்தக்காரன் தன் வளவில் நின்ற மரங்களில் உள்ளஇளநீர் முழுவதையும் பறித்துக்கொடுத்தார். இவ்வற்புதம் பற்றி கும்பளாவளைப் பதிகத்தில் அடியார் பாடிய பழைய பாடல் இது.

''சித்தங் குலைந்த வடியான்
மனத்துயர் தீரவெண்ணி
அத்தெங்கொருகுலையோரிரு
பாதியருணனிறம்
வைத்தங்கெவர்க்கு முன்னற்
புதம்காட்டி மகிழ வைத்தாய்
நத்தத் தருவினையேற்கு
கலிதோ அருள் நல்குவதே

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு தர்மகர்தா சபைத்தலைவராகப் பலகாலம் இருந்து தற்போது காலம் சென்ற திரு. செ. மயில்வாகனம் அவர்களின் சேவை பாராட்டப்பட வேண்டியது. இவ்வாலயம் வருடந்தோறும் வளர்ச்சி அடைந்து வருவது மாத்திரமன்றி ஆலயத்தில் வழிபடுவோர் தொகையும் அதிகரித்து வருகிறது. இவ்வாலயத்துக்கு அருகாமையில் ஒரு கலியாண மண்டபம் கட்டுவதற்கு ஒரு அன்பர் முன்வந்துள்ளார். இங்கு நடைபெறும் நடைபெற்ற திருப்பணிகள் யாவும் விநாயக அடியார்கள் மனமுவந்து அளித்த பேராதரவினுலேயே என்பதைக் கூறும் போது மகிழ்ச்சி அடைகின்ருேம். எல்லாம் வல்ல விநாகப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்ருேம்.

**தர்மகர்தாக் சபை**
**கும்பழாவளை**
**அளவெட்டி**


தேரேறி ஒய்யாரமாகப் பவனி வரும்
கும்பளாவளை ஓங்கார விநாயகன்
காட்சி காண வாரீர்

★ விநாயகர் ஸ்ரோர்ஸ்
அளவெட்டி

★ எஸ். பி. என். றேடேர்ஸ்
அளவெட்டி

★ செ. பாஸ்கரன்
அளவெட்டி

★ ராணி சலூன்
அளவெட்டி

★ விநாயகர் அடியார்
அளவெட்டி

★ ந. நிரோஜினி
தெல்லிப்பழை

★ மணிக்கடை வியாபாரிகள்
★ கடலே வியாபாரிகள்
கோவில் வீதி,
அளவெட்டி


## இரதோற்சவ பண்ணிசை நிகழ்ச்சி

10-00 — 10-15 ''ஆசியுரை''
10-15 — 11-00 'சங்கீத வித்துவான்' திரு: வர்ணகுலசிங்கம் அவர்கள்
11-00 — 11-40 'இசைக் கலைமணி' திரு. சி. சிவஞானராசா அவர்கள்
11-40 — 11-55 தொண்டர்சபையால் நடாத்தப்படும் பண்ணிசை வகுப்பு மாணவர்கள் - A
11-55 — 12-35 'இசைக்கலைமணி' திரு. சி. பாலச்சந்திரன் அவர்கள்
12-35 — 1-00 தொண்டர்சபையால் நடாத்தப்படும் பண்ணிசை வகுப்பு மாணவர்கள் - B
1-00 — 1-15 இடைவேளை
1-15 — 1-55 செல்வி இ. விஜயலட்சுமி அவர்கள்
1-55 — 2-35 சங்கீத பூஷணம் திரு. V. சிவஞானசேகரம் அவர்கள்
2-35 — 3-30 'சங்கீத பூஷணம்' திரு. V. K. நடராசா அவர்கள்


# ...ள்ளையார் கோவில் தேர்த்திருவிழா

# ...மலர் 7-6-1990 ★

## ...விநாயகப் பெருமானின் 32 தோற்றங்கள்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் உட்பிரகாரத்தில், எந்த விநாயகராலயத்திலும் காணப்படாத விநாயகப் பெருமானின் அதிஅற்புத திருவுருவங்கள் முப்பத்திரண்டு தோற்றங்களில் சித்திரமாக்கப்பட்டு கரட்சியளிப்பதைக் காண கண்களிரண்டு போதுமா? போதாது என்று சொல்லவேண்டும்.

பாலகணபதி, தருணிகணபதி, ஸ்ரீபக்திகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவிஜகணபதி, சித்திகணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்னகணபதி, சுப்பிரகணபதி, ஒரம்பகணபதி, இலட்சுமிகணபதி, மஹாகணபதி, விஜயகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்துவகணபதி, ஏகாட்சரகணபதி, வரகணபதி, திரயாக்ஷரகணபதி, சுப்பிரசாதகணபதி, ஹரித்திராகணப்தி, ஏகதந்தகணபதி, சிருஷ்டிகணபதி, உத்தண்டகணபதி, ரணமோசன கணபதி, துண்டிவிநாயகர், துவிமுககணபதி, மும்முக கணபதி, சிங்ககணபதி, யோககணபதி, துர்க்காகணபதி, சங்கடஹரகணபதி.



## கும்பழாவளை விநாயகர் நீராடி மண்டபம்


கும்பழாவளை விநாயகப் ...ருமான் ஆண்டுதோறும் ...ரும் வைகாசி மாதப் பூர ...க்குத் தீர்த்த மாடவும். ...தந்தோறும் சங்கிராந்தி ...த்தமாடவும் அறுபத்தி ...ண்டு அடி சதுரமான தீர்த் ...கேணி ஒன்று கலையம்சம் ...பாருந்தியதாக ஆலயத்தின் ...தற்கு வீதியில் 13-6-84ல் ...மைக்கப்பட்டுள்ளது.

இத் தீர்த்தக் கேணியின் ...தற்கே முருகன் ஆலயமும், ...மற்கே மண்டபம் ஒன்றும், ...டக்கே விநாயகர் ஆலய ...ம் ஒருங்கே சூழ கேணியின் ...வே நீராடி மண்டபம் ...ன்று கலை அம்சங்களோடு ...மரை இதழ்களின் நடுவில் ...மைக்கப்பட்டுள்ளது.

...தாமரை இதழ்களின் நடு ...ல் அமைக்கப்பட்டுள்ள ...ராடி மண்டபத்தில் விநாய ... பெருமானின் 16 தோற் ...ங்கள் சிலையாக செதுக்கப் ...ட்டுள்ளன. நவநங்கைகள் விநாயகப் பெருமானுக்கு தீர்த்தம் சொரியும் பாவனையாக நவதேவ கன்னிகைகள் (சுவாமி தீர்த்தமாடும்போது) தீர்த்தம் சொரிந்து கொண்டிருக்கும் பாவனை பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும் பாங்குடையதாக உள்ளது.

நவதேவ கன்னிகைகள் நீராடி மண்டபத்தின் நான்கு மூலைகளுக்கும் இருவராக எட்டுப்பேரும், மண்டபத்தின் நடுவே ஒருவருமாக நவகன்னிகைகள் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய அதி அற்புதம் வாய்ந்ததும், ஈழத்தில் மட்டுமல்ல. இலங்கையின் எப்பாகத்திலுள்ள சைவ ஆலயங்கள் எவற்றிலும் காணப்படாததுமான தீர்த்தக்கேணியின் நடுநாயகமாக அமைந்துள்ள நீராடி மண்டபத்தில் சிறிய அளவிலான கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (மூவா)



## கும்பழாவளைத் தொண்டர் சபை வரலாறு

1956-ம் ஆண்டு காலஞ்சென்ற ஆசிரியர் திரு. இ. முருகேசு அவர்களிடமும், காலஞ்சென்ற ஆலயத் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. செ. மயில்வாகனம் அவர்களிடமும், ஆலய வருட மகோற்சவ இரதோற்சவ விழாத்தினம் ஒலிபெருக்கி வாடைகைக்கு அமர்த்தி பண்ணிசை ஒலிப்பதிவுத் தட்டுக்களை ஒலிபரப்ப வரும்புவதாக மூன்று இளைஞர்கள் தெரிவித்து (8-ம் பக்கம் பார்க்க)

## மகா கும்பாபிஷேகம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் விநாயகப்பெருமான் அருளால் 1991-ம் ஆண்டு நடைபெறவிருப்பதால் திருப்பணி வேலைகளை நிறைவேற்ற அடியார்கள் பண உதவி செய்து உதவுவீர்களாக.

— ஆலய நிர்வாகம்

## ஓங்கார விநாயகனின் ஒய்யாரப்பவனி

ராகம்: ஹம்ஸாநந்தி தாளம்: ஆதி

பல்லவி

ஊர்கூடித் தேரிழுக்க
ஓங்கார விநாயகன்
ஒய்யாரமாகப்
பவனி வந்தான்—அளவையில்

அநுபல்லவி

தேர்மீது பவனிவர
தெய்வகானம் இசைக்க
பார்மீது பக்தர்கள்
பரவசக் கண்ணீர் சொரிய

சரணம்

நாதஸ்வர ஒலி
விநாயகன் புகழ்பாட
ஆதரவாய்த் தவில்
ஆனந்தமாய் முழங்க
வேதகோஷம் ஒலிக்க
கொம்பினெழுத்தாணி யேந்தி
கும்ளாவளைக் கொம்பன்
அம்புவியில் பாரதத்தை
அழகொழுகத் தந்தவனும்
நம்பும் அடியருக்கு வந்தே
நவில் முப்பத்திரண்டுருவில்
கிம்புரி ஆனைமுகன்
கும்பிட்டடியார் பக்தியுடன்.

'கவிமாமணி'


தேரேறி ஒய்யாரமாகப் பவனி வரும்
கும்பழாவளை
ஓங்கார விநாயகன்
காட்சி காண வாரீர்...!

க. கதிர்காமசிங்கம் அன் சன்
பலசரக்கு வியாபாரம்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

பொன்மலர் ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதி
அளவெட்டி

கே. வி. அப்புத்துரை அன் சன்ஸ்
சிறுவிளான்
இளவாலை

கே. பி. எஸ். போட்டோ அன்
பான்ஸி குட்ஸ்
சிறுவிளான், இளவாலை.

ராஜா கிறைன்டிங் மில்
அளவெட்டி தெற்கு
அளவெட்டி

ச. பாஸ்கரன் [தேநீர்க் கடை]
சங்கானை - வல்லை வீதி
அளவெட்டி

கே. தருமரட்ணம்
[ஐங்கரன் வெல்டிங்]
அலுக்கைச் சந்தி, அளவெட்டி.

செ. றகுநாதன் ஸ்ரோர்ஸ்
அலுக்கைச் சந்தி
அளவெட்டி

லிங்கம் கிறீம் ஹவுஸ்
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்

மல்லிகா கிறீம் ஹவுஸ்
மானிப்பாய்

குணம் கிறீம் ஹவுஸ்
மயிலிட்டி

சாரதா கல்வி அகம்
கூட்டுறவாளர் வீதி
அளவெட்டி

கிருபா போட்டோ அன்
றெக்கோடிங் சென்ரர்
கே. கே. எஸ். றேட், மல்லாகம்.

## தற்கொலைச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தி உற்ற இளம்பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவத்தில் புத்தூர் மேற்கு வேம்பிராய் என்னும் இடத்தைச் சேர்ந்த லதா கிருஷ்ணபிள்ளை (வயது 15) எனும் பெண்ணே தற்கொலை செய்துகொண்டவராவார்.

இதுதொடர்பாக நடைபெற்ற விசாரணையில்; இறந்தவருக்கு தாய் இல்லையென்றும், தந்தை வேறு திருமணம் செய்து கொண்டார் என்றும் மாமனுடன் வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. திடீர்மரண விசாரணை அதிகாரி எஸ்.எஸ்.பிரான்சிஸ் விசாரணை மேற்கொண்டார். யாழ். போதனு வைத்தியசாலைப் பொலிஸ் பகுதிப் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். லோகநாதன் சாட்சிகளை நெறிப்படுத்திஞர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### மற்றுமொரு தற்கொலை

குடும்பத் தகராறு காரணமாகக் குடும்பப்பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

பண்ணுகம்-தெற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மனோன்மணி துரைசிங்கம் (வயது 45) எனும் 5 பிள்ளைகளின் தாயாரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

மரணவிசாரணையை பதில் நீதவான் அன்ரனி மேற்கொண்டார். யாழ். போதனு வைத்தியசாலை பொலிஸ்பகுதி பொலிஸ் உத்தியோகத்தர் திரு செ. கோபாலகிருஷ்ணன் சாட்சிகளை நெறிப்படுத்திஞர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

0 0

(புங்குடுதீவு)

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மனமுடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

புங்குடுதீவு-12 ம் வட்டாரத்தைச் சேர்ந்த சி. சிவபாதம் என்பவரே இவ்வாறு மரணித்தவராவார். (101)

## ஆந்திராவில் ரயில் விபத்து: 13 பேர் பலி; 60 பேர் காயம்!

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் 13பேர் இறந்துள்ளதுடன் 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரது நிலை ஆபத்தானதாகவுள்ளதாகவும், சிதைவுகளிலிருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டு அதில் மூன்று சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தீயில் எரிந்து ஏழு பேர் சாம்பலானுர்கள் 500 குடிசைகளும் தீக்கிரை

(புதுடில்லி)

கிழக்கு டில்லியில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட தீவிபத்தில் ஏழு பேர் எரிந்து சாம்பலானுர்கள். பலர் காயமடைந்துள்ளதுடன், ஐநூறு குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன.

19 தீயணைப்பு வண்டிகள் இந்தத் தீவிபத்தினைக் கட்டுப்படுத்த இரு மணி நேரம் ஈடுபடுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முறைசாராக் கல்விப் பிரிவினரால் 1989ம் ஆண்டுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 9ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (152)

## விளையாட்டுப் போட்டி

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை ரோ. க. த. க. பாடசாலையின் மெய்வல்லுனர் போட்டி கடந்த 26ம் திகதி பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக மருதனுமடம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரமும், பிரதம விருந்தினராக நவாலி கோட்டக்கல்விப் பாடசாலை அதிபர் திரு. ஐ. மனோகரனும் கலந்துகொண்டு உரைநிகழ்த்திஞர்கள். [71]

## இப்படியும் நடக்கிறது

வானெலியிலோ அல்லது தொலைக்காட்சியிலோ செய்திகள் வாசிக்கும்போது, பிழையாக வாசித்தால் அல்லது தவறுகள் நடந்தால்; நேயர்களிடம் மன்னிப்புக் கேட்டு, மீண்டும் செய்தியை சரியாக வாசிக்க வேண்டியதுதான் முறை.

ஆனல் இந்த 'மரபு' பேணப்படுவதில்லை!

'வாசிப்பது எனது கடமை. கேட்கவேண்டியது உங்கள் 'தலைவிதி'- இந்தப் போக்குத்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனுலும் ஓர் 'அற்புதம்' நேற்றுமுன் தினமிரவு நடைபெற்றுவிட்டது!

நேற்று முன்தினமிரவு 'ரூபவாஹினி'யில் செய்தி வாசித்துக் கொண்டிருந்தவர் ஒரு கட்டத்தில்; "......சாகஸ விளையாட்டுக் காட்சிகளை நீங்கள் இப்பொழுது பார்க்கலாம்......" என்ருர். ஆனுலும் எந்தக் காட்சியும் 'டி.வி.'யில் வரவில்லை. மாருக அறிவிப்பாளரின் தோற்றமே தெரிந்தது, சில செக்கண்டுகள் ஓடியிருக்கும். அவரும் பொறுமை இழந்து... "படம் கிடைக்கவில்லைப்போலும்..." என்று கூறி ஜோரா சமாளித்து விட்டார்!

பார்த்துக் கொண்டிருந்த நேயர்களும் 'கொல்' என்று சிரித்து அந்த அறிவிப்பாளருக்கு 'சபாஷ்' கொடுத்து விட்டனர்! இந்த நல்ல நடைமுறை தொடருமா?

'ஊடுருவி'

## ஈறிலாப் பதமளிக்கும் இறைவியே

சுதுமலைவாழ் புவன ஈஸ்வரியே
சுந்தரியே சங்கானைப் பதியில்
முதுமையில் இங்குநீ கோயில் கொண்டு
முழுமையாய் இன்னல் கண்டு
இதுவரை பட்டஎம்மின் இடர்பல போக்கினுயே
ஈறிலாப் பதமளிக்கும் இறைவியே
புதுமையாம் உனக்குப்போட்ட குண்டினை
புகவிடா தப்புறம் வீசினுயே!

— நா. சச்சிதானந்தன்

(சுதுமலை அம்மன் கோவில் தேர் இன்று)

# பாரோர் போற்றிவணங்கும் பாலாவோடை அம்பாள் இன்றுபவளத்தேர்ஏறிபவனிவருகிருள்

புராண இதிகாசங்களில் அரக்கர்களின் இன்னல்களைப் போக்க தெய்வங்கள் அவதாரங்கள் பல எடுத்திருப்பதை நாம் அறிவோம். சிவனின் சக்தியான அம்பிகையானவள் பல ரூபங்களில் தோன்றி அரக்கர்களை அழித்து மானிடர்களுக்கு அடைக்கலம்கொடுத்திருக்கின்ருள். அவ்வாறு உருவெடுத்த அம்பிகையே முத்துமாரி அம்மனுகும்.

மகாமாரன் என்னும் அசுரன் தனது சக்தியாலும், தான் பெற்ற வரங்களின் வலிமையினுலும் பூமியின்தாகம், தாபம், என்கிற நோய்களைக் கொடுத்துக்கொண்டிருந்தான். அந்த நோய்களெல்லாம் மருந்தினுல் நீக்கமுடியாதவை. சூரி என்ற பெரும்நோயாக சரீரம் முழுவதும் கொப்பளங்களாகவும் முத்துக்களாகவும் ஆகி கண் முதலானவற்றைக் கெடுத்து பெரிய இன்னல்களை உண்டாக்கிக்கொண்டிருந்தன. அவனைச் சங்காரம்செய்யவே ஸ்ரீஅம்பிகையானவள் மாரி என்னும் ஓர் உருவத்தை எடுத்து அசுரனை அழித்து வைசூரியை நீக்குகின்ருள்.

துஷ்டர்களுக்கு பயங்கரமானவளாகவும், பக்தர்களுக்கு சாந்த சொரூபியாகவும் காட்சிகொடுக்கும் மாரியான வள்மூன்றுகண்களையும் நான்கு கைகளையும், அக்கினிசுவாலைபோல் மேல் நோக்கிய கூந்தலுடன் காட்சி அளிப்பாள். சிகப்புநிறமுடைய இவள் வாள், சூலம் தீச்சட்டி டாமரகம் என்னும் வாத்தியம் ஆகியவற்றை அணிந்திருப்பாள்.

நான்கு கரங்களிலும் கொடிய ஆயுதங்கள்கருணையே வடிவான அன்னை மாரியின் கைகளில் கொடிய கொலைக் கருவிகள். அவைகொடிய ஆயுதங்கள் அல்ல. வாள், ஞானத்தின் அடையாளம், சூலம், காமக்குரோதங்களைக் குத்திப் பிளப்பதன் அடையாளம், தீச்சட்டி பிரளய முடிவைக் காட்டுவது. டாமரகம் அஞ்ஞானத்தை விரட்டும் கருவி.

உலகத்தில் வாழும் மானிடருக்கு தேவையான சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையிலேயே அன்னை மாரியின் நான்கு கரங்களும் நான்கு ஆயுதங்களை ஏந்திநிற்கின்றன.

உலகத்தை வாழ்விக்க அதிகமாக தேவைப்படுவது நீர் அந்நீரைமழைமூலம் பெறுகின்ருேம்அவ்வாறு மழை பெய்யும் காலத்தை மாரிக்காலம் என்கின்ருேம், எந்தளவு மாரிகாலத்தின் தயவுதேவையோ அதே போல் அதைத்தருகின்ற மாரி மாரியாத்தாளின் தயவும் எமக்கு வேண்டும். மழையாக வருபவள் மாரித்தாய் தான் அவளைக் குளிர்மைப்படுத்தினுல் மழையாகப் பொழிவாள்.

[காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி அருள்மிகு முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புக் கட்டுரை]

பெற்றதாய் தன் குழந்தைக்கு எவ்வாறு உணவுத்தேவைகளை நேரத்துக்குநேரம்காலத்துக்குக் காலம்ஊட்டுகின்ருளோ அதே போலவே அன்னை மாரியானவள் உலக மக்களின் தேவைகட்கு ஏற்ப மாரியாகப் பொழிகின்ருள்.



அவளின்மனம் என்றுமே குளிர்மையாகத் தான் இருக்கும் அவள்குடி கொண்டிருக்கும் கோயில் பிரகாரங்கள் எந்நேரமும் குளிர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவள் உக்கிரமான தெய்வம். அந்த உக்கிரத்தை தணிப்பதற்கு நீர்தான் அவசியம். தஞ்சாவூர் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் வெட்டப்பட்ட நீர்த்தேக்கம் அன்னை எந்நேரமும் குளிர்மைப்படுத்திக் கொண்டிருப்பதற்காக தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனுல் வெட்டப்பட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது.

பாலாவோடையில் குடிகொண்டிருக்கும் மாரி அம்மன் எந்நேரமும் குளிர்மையிலேயே அமர்ந்திருக்கின்ருள். கடற்கரையோரத்தில் கடற்காற்றின் குளிர்மையில் அமர்ந்திருக்கின்ருள். அவள் கடலை நோக்கி இருப்பதால் தான் உக்கிரம் தணிந்து அன்பர்க்கும் அடியவர்க்கும் அருள் ஆட்சி புரிந்துகொண்டிருக்கின்ருள்.

இத்தலத்தின் மகிமைக்கும் மகோன்னத நிலைமைக்கும் அவளின் கருணைக்கும் அருளுக்கும் அவளின் தீர்த்தமாக சமுத்திரம் இருப்பதே எந்நேரமும் குளிர்மையாக இருப்பதால் தான். அடியார்கள் கேட்பனவற்றை எல்லாம் வாரி வளங்குபவளாக மாரி பாலாவோடை குறிஞ்சாக்குளியில் காட்சி அளிக்கின்ருள்.

## வடம்பிடிக்க வாருங்கள்!

தொழுகையே செய்த பேர்க்குத்
தூய நல்வாழ்வு நல்கி
அழுகைத்தீர்த்தின்பம் ஆக்கி
அரிதெனும் பேறு ஈந்து
பழுதுருவண்ணம் காக்கும்
பரமேட்டிவள் மீகத்தாள்
பாலாவோடைப் பதியில் நின்றே
உலகெலாம் புரிப்பாள் போற்றி போற்றி

★ ★

புற்ருக வந்தவளை
குறிஞ்சாக்குளியில் பூத்தவளைக்
கற்ருரை மற்ருரைக்
கைதூக்கி எத்திசையும்
கொற்றவையாள் நெஞ்சத்தில்
சோதின்றி தூக்கிடுவாள்
பற்ருத மனமே நீ பற்று

அன்னை முத்துமாரித்தாய் ஆக்கவடனே யமர்ந்து
மன்னிவிளங்கும் வனதானில் - துள்ளி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தால் மேல்வீட்டில்
இடம் பிடிக்கலாகும் எளிது.

அம்பிகை பக்தன்
கே. கே. வரதன்.
வளுப்போடை, களபூமி.

# கொழும்புத்துறைமேற்கு அருள்மிகு வதரிபீடமன்றுளாடும் பெருமான் ஸ்ரீ விநாயகமூர்த்திப்பிள்ளையார் தேர்த்திருவிழா

## கணபதி கதையின் தத்துவம் என்ன?

பாலகணபதி; தருணகணபதி; பக்தி கணபதி; வீரகணபதி: சக்தி கணபதி; துவிஜ கணபதி; சித்தி கணபதி: உச்சிஷ்டகணபதி; விக்னகணபதி: க்ஷிப்ரகணபதி; ஏரம்பகணபதி; லட்சுமி கணபதி; மஹா கணபதி; விஜயகணபதி; நிருத்த கணபதி; ஊர்த்துவ கணபதி, ஏகாட்சர கணபதி; வரகணபதி; திரயாக்ஷர கணபதி; க்ஷீப்ரபிரசாத கணபதி: ஹரித்திரா கணபதி; ஏகதந்த கணபதி; சிருஷ்டி கணபதி; உத்தண்ட கணபதி, ரணமோசன கணபதி; துண்டிகணபதி; துவிமுககணபதி; மும்முக கணபதி; சிங்ககணபதி; யோக கணபதி; துர்க்கா கணபதி: சங்கடஹர கணபதி என விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானுடைய திருவுருவம் முப்பத்திரண்டாக அன்பர்களுக்காகப் போற்றப்படுகின்றது.

கணபதியின் தோற்றம் பற்றிச் சிவபுராணம், மத்ஸ புராணம், கப்பிரபேதம், காஞ்சிப் புராணம், கந்த புராணம், விநாயக புராணம் என்பன பலவாறுக உரைக்கின்றன.

திருக்கைலையில் பிள்ளை ஆசை காரணமாக உமாதேவி ஒரு முறை மண்ணுல் உருவமைத்து உயிர்கொடுத்துத் தன் மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட சிவன் புதல்வர்ப் பேற்றைக் கொண்டாடத் தேவர்கள் எல்லோரையும் அழைத்தார். தேவர்களோடு சனீஸ்வரனும் வந்தான். சனீஸ்வரனின் பார்வையால் குழந்தையின் தலை அறுபட்டுப் போயிற்று. அறுந்த தலையும் மறைந்தது. உமை வருந்தினார். சிவன் பூத கணங்களைப் பார்த்து 'இவ்வனத்தில் வடக்கே தலைவைத்துறங்கும் விலங்கொன்றின் தலையாவது கொணர்க'' என்றார். அவர்களும் அங்ஙனமே சென்று ஒரு யானைத் தலையைக் கொணர்ந்தார்கள். சிவபெருமான் அதனைப் பொருத்திக் குழந்தையை உயிர்ப்பித்துக் கொடுத்தார். இறைவன் யானை முகப் புதல்வரைக் கணநாதராக்கினர் என்கிறது சிவ புராணம்.

உமாதேவியார் தன்தோழியரான ஜயை, விஜயைகளுடன் அந்தப்புரத்திலுள்ள திருமஞ்சன அறைக்கு நிராடச் சென்றனர். அப்போது ஜயை என்பாள் ''சிவகணத்தவர்களான நந்தி, பிருங்கிகளைத் தானே யாமும் காவலர்களாக வைத்திருக்கிறோம். நமக்கென்று தனியாளைப் பெருமாட்டி ஏன் படைத்து வைத்துக் கொள்ளக்கூடாது''என்று வேண்டிக்கொண்டாள், உமையம்மை தன் திருமேனியின் அழுக்கை உருட்டி உருவாக்கி உயிர்கொடுத்துக் காவல்வைத்துச் சென்றனர். அக்காலை சிவன், உமையம்மையாரைக் காண உள்ளே வந்தார். புதுக் காவலன் தடுத்தான். முடிவில் தரமறியா அவன் தலையைப் பரசினுல் வெட்டினார். செய்தி அறிந்த பிராட்டி வருந்தினர். சிவபெருமான் யானைத் தலையைப் பொருத்தி உயிர்ப்பித்தனர் என மத்ஸ புராணம் விளக்குகிறது.

உமையும் சிவனும் உய்யானவனத்திற்குச் சென்றனர். அங்கே பிடியும் களிறும் தம்முட் கலந்து நின்றன. அவற்றைக் கண்ட இவர்களும் பிடியும் களிறும் ஆயினர், பிள்ளையார் பிறந்தார் என்று சுப்பிரபேதம் உரைக்கிறது.



சிவனும் உமாதேவியும் உய்யானம் சென்றனர். அங்கே ''மந்திரசாலா'' என்றமண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. சமஷ்டிப் பிரணவமாகிய அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய அகரம் களிறுகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும் ஆயிற்று. அவை இரண்டும் கூடினர். விநாயகர் தோன்றினர் எனக் காஞ்சிப் புராணம் விரிக்கிறது.

உய்யானத்திருந்த சித்திர மண்டபத்திலே ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம் பிடியும் களிறுமாகிச் சேர்ந்தன. பிள்ளையார் அவதரித்தாரென விரிக்கிறது கந்தபுராணம்.

பரமசிவன் உலகப் புனருற்பத்தி செய்யத் திருவுள்ளங் கொண்டு விநாயகராக உருவு கொண்டனர் என விநாயக புராணம் விரிக்கிறது.

**சரவணன்**

## சங்கிலி மன்னர் காலத்து கோயில் இது

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ மன்றுளாடும் விநாயகப் பெருமானுக்கு நாம் எடுக்கும் எல்லா விழாக்களுமே அதி உந்நத ஸ்தானம் வகிப்பன.

14ம் நூற்றுண்டில் சங்கிலி மன்னர் காலத்தில் பூசிக்கப் பட்டுவந்த இக் கோயில், 1505ம் ஆண்டு போர்த்துக்கேயரால் தரைமட்டம் ஆக்கப்பட்டது. கோயிலின் வாசலில் சங்கிலி மன்னனின் மகன் எதிர்மானசிங்கனும் கோவில் குருக்களும் போர்த்துக்கேயரை எதிர்த்து யுத்தம் செய்து வீரசுவர்க்கம் அடைந்தனர், ஆனுல் மூலவர் பாதுகாப்பாக வைக்கப்பட்டார்.

பின்னர் 1623ம் ஆண்டில் டச்சுக்காரரர் காலத்தில் விநாயகப்பெருமான் மீண்டும் தியாகரத்தின முதலியாரினுல் சிறுப்புலம் என்னும் அவரது காணியில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டார். இச் சிறப்புமிக்க கோவிலின் முன்னேற்றம் கொழும்புத்துறை மேற்கில் வசிக்கும் அனைத்து சைவ மக்களின் ஒற்றுமையிலும், ஒத்துழைப்பிலும் விடாமுயற்சியிலும்தான் தங்கியுள்ளது.

பொ. சண்முகநாதன்
நிர்வாகசபைத் தலைவர்

## சரித்திரத்தில் ஓர் பொன்னுள்

கொழும்புத்துறை கிராமம் இருவகை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. முதலாவதாக, பன்னூறு வருடங்களுக்கு முன்னர் தென் இலங்கையிலுள்ள கொழும்பு மாநகருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குமிடையே கடல் மார்க்கமாக மரக்கலங்கள் மூலம் வணிகத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டு வந்தபொழுது எமது கிராமமே மரக்கலங்கள் வந்து தங்கவும் புறப்படவும் உரிய துறைமுகமாகப் பாவிக்கப்பட்டது. இதனுலேயே ''கொழும்புத்துறை'' எனும் காரணப்பெயர் பெற்றுள்ளது. இரண்டாவதாக எமது தவத்திரு யோக சுவாமிகள் எமது கிராமத்தில் வாழ்ந்து நிஷ்டை கூடிய இடமாகையால் ஆன்மீக ரீதியிலும் ஓர் முக்கியத்துவமான கிராமமாக மிளிர்வது இக் கொழும்புத்துறை.

சுமார் ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் ஓர் விநாயகர் ஆலயத்தை நிறுவி 'வதரிபீட மன்றுளாடும் பெருமான் ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையார்' என்ற நாமகரணம் சூட்டி இக்கிராம சைவசமயிகள் வணங்கி வந்தனர். இந்த ஆலயம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் சென்ற 1988-ம் ஆண்டு சைவ நித்திய நைமித்திய பூசைகளுடன் நிர்வகிக்கப்பட்டு வந்தது. விநாயகப் பெருமான் அனுபூதியினுல் 1983-ம் ஆண்டு தொடக்கம் இந்த ஆலய நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பல திருப்பணி வேலைகள் முற்றுவிக்கப் பெற்றதுமன்றி ஆலயக் கும்பாபிஷேகமும் நிறைவேற்றப் பெற்றுள்ளது.

கடந்த 1989-ம் ஆண்டு வைகாசி மாதத்தில் முதன் முதலாகக் கொடியேற்ற உற்சவமும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு மஹோற்சவமும் நடந்துள்ளது. இவ்வருட உற்சவம் 30-5-90-ம் திகதி ஆரம்பமாகி தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட தேரின் மீது விநாயகப் பெருமான் ஆரோகணித்து வீதி உலாவர ஏற்பாடாகியுள்ளது. ஆலயத்தின் ஒரு நூற்றுண்டு காலச் சரித்திரத்தில், இது ஓர் முக்கிய நிகழ்ச்சி எனக் கூறுவது சற்றும் மிகையாகாது.

ந. வி. சரவணமுத்து
(கௌரவ செயலாளர்,
ஆலய நிர்வாகசபை)

மலர் தயாரிப்பு:
**கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம்**

## கணநாதனை போற்றி புகழ்வோம்

20ம் நூற்றுண்டின் மாமுனிவர் என வியந்து, சைவ நல்லுலகத்தினரால் போற்றப்படுகின்ற சிவயோக சுவாமிகள் அவதரித்து வாழ்ந்து, அருளொளி பரப்பி, அஞ்ஞான இருளகற்றி ''ஒரு பொல்லாப்பும் இல்லை'' ''எப்போதோ முடிந்த காரியம்''போன்ற பல மகா வாக்கியங்களை அருளி, வாழும் நெறி காட்டித் தம் பொற்பாதம் பதித்து கொழும்புத்துறையில் உலவினர் என்பதனை நினைக்கும்போதெல்லாம் உடல் சிலிர்க்கிறது.

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட மன்றுளாடும் ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையாருக்கு சிவகாம விதிமுறைகளுக்கமைய முதன்முதலாகக் கடந்த ஆண்டு கொடியேற்றப்பட்டு, பத்து நாட்கள் திருவிழா இனிதே நடைபெற்றிடத் திருவருள்பாலித்திருந்தது. அதைத் தொடர்ந்து இவ்வாண்டும் எம்பெருமானுக்கு கொடியேற்றம் நடைபெற்றதுடன், 9-ம் நாளாகிய இன்று எம்பெருமான் புதிய தேரில் எழுந்தருளி, வீதியுலா வந்து அடியார்க்கருளும் அருங்காட்சி, கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை மிகு காட்சி.

கொழும்புத்துறை வாழ் சைவ நன்மக்களோடு யானும் இணைந்து எம்கணநாதனை - எம் குலநாதனைப்- போற்றிப் புகழ்ந்து, எல்லா நலமும் வளமும் வாய்த்திட இன்னருள் புரியும் வண்ணம் பொற்பதம் பற்றி இறைஞ்சுகிறேன்.

க.மாணிக்கவாசகர்
(அரச - அதிபர் கிளிநொச்சி மாவட்டம்)

## நிம்மதி வழங்காயோ ஆனைமுகனே

ராகம்: சகாணு தாளம்: ஆதி

பல்லவி

நின்மதி இரங்காதோ வேழமுகனே - எனக்கு
நிம்மதி வழங்காயோ ஆனைமுகனே – இன்னும்
(நின்மதி......)

அனுபல்லவி

இலந்தைக் குளப்பதியில் நிறைபவனே - கொடும்
இலம்பையி லுழல்பவர்க்கு அருள்பவனே - ஐயா
(நின்மதி......)

சரணம்

விஞ்சிடும் துயரால்நான் துடித்திடவும் - உனைக்
கெஞ்சிடும் குரலால்நான் அழைத்திடவும் - இனித்
தஞ்சமென் றுன்பாதம் பிடித்திடவும் – எனை
அஞ்சலென் றணைக்காது இருப்பதுமேன் – கணேசா
(நின்மதி......)

— ச. முருகையா

[இன்று கொழும்புத்துறை மேற்கு வதரிபீட மன்றுளாடும் ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்தேர்.]


தேர்த்திருவிழா
சிறப்புற
வாழ்த்துகிறோம்.

V.S.நவரத்தினம்ஸ்ரோர்ஸ்
173, கொழும்புத்துறை வீதி,
சுண்டுகுளி,
யாழ்ப்பாணம்.

விஜி வீடியோ சென்ரர்
103, புங்கன்குளம் ரோட்,
அரியாலை.

மேகாஸ் வீடியோ
154, கண்டி வீதி,
[மாம்பழம் சந்தி]
அரியாலை.

பாண்டியன்தாழ்வு
பேக்ஹவுஸ்
65, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சவாரிஸ்
கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

நல்லூர் வீடியோ சென்ரர்
19, முருகேசர் லேன்,
நல்லூர்.

செ. தெய்வேந்திரம்
[காந்தன் மில்]
303, கொழும்புத்துறை.

மணியம்ஸ்
[புடவைக்கடை]
நவீனசந்தை, யாழ்ப்பாணம்

ஹமாட் வீடியோ ரேட் சென்ரர்
56, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

சம்பந்தர் பார்மஸி
66, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்

பாலசிங்கம் ஸ்ரோர்ஸ்
203, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

VIDEO LOVERS
770, Point Pedro Road,
Nallur, Jaffna.

ஸ்ரீ அம்பிகை
கூல் அன் கொட்
463, கண்டி வீதி,
[தபால் கட்டைச் சந்தி]
அரியாலை.

அரியாலை மல்ரி மாக்கற்
479, கண்டி வீதி,
அரியாலை.

சில்வர் ரோண்
398, பிரதான வீதி,
[பஸ்ரியன் சந்தி]
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா
120, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

கனகரட்ணம் ஸ்ரோர்ஸ்
172, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

வேணுஜா சலூன்
396, கண்டி ரோட்,
மாம்பழம் சந்தி.

பொன்மணி ஸ்ரோர்ஸ்
சுவாமியார் லேன்,
கொழும்புத்துறை.

## கும்பழாவளை தேர்

(யாழ்ப்பாணம்)

காலை 6-30 மணி அபிஷேகம், மாலை 4-15—5-00 மணி வரை பூசை.

காலை 7-00 மணி பூசை, மாலை 5-00 மணி வசதமண்டபப் பூசை.

காலை 7-30 மணி கொடித்தம்ப பூசை, மாலை 5-15 மணி திருஊஞ்சல்.

மு. ப. 9-00 மணி வசந்த மண்டபப் பூசை, இரவு 6-30 மணி கொடியிறக்கம்.

மு. ப. 10-00 மணி விநாயகப் பெருமான் தீர்த்தமாடுதல், இரவு 7-00 மணி திருவிழாவும், சண்டேஸ்வரர் பூசையும்.

## வரலாறு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குத் தமக்கு அனுமதியளிக்குமாறு கோரினர். மூன்று பேர் மட்டும் போதாதெனவும், வேறும் இளைஞர்களுக்கும் இவ் விடயத்தைஅறிவித்து, ஓர் நல்ல நாளில் எல்லோரையும் கூடச்செய்யுமாறும், அக் கூட்டத்திற்குள் தாமும் சமுகமளிப்பதாகவும் அப்பெரியார்கள் பணித்தனர். இக் கூட்டத்திலேயே இச்சபை உருவாக்கப்பட்டது. இச்சபைக்கு ''அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை'' என நாமமிட்டு ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அப்பர் திருவாக்குக் கேற்பச் செயற்படுமாறு திருமுருகேசு அவர்கள் வாழ்த்தினர். அவரின் இனிய சொல்லுக்கும், செயலுக்கும் ஏற்ப இச்சபை பல்வேறு துறைகளாலும் வளர்ச்சியுற்று இன்று அகில இலங்கையிலுமே முன்மாதிரியாக எடுத்தியம்பக் கூடிய நிலையில் செயலாற்றி வருகின்றது. சபையின் முக்கிய நோக்கம் ஆலயத்தில் காலத்துக்குக் காலம் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வதேயாகும். இச்சபை வருடந்தோறும் நடைபெறும் திருவிழாக் காலங்களில் ஆலயத்தை சுத்தமாக வைத்திருக்க பலவித தொண்டாற்றி வருவதோடு, உற்சவ காலத்தில் வியாபாரிகள் ஓர்பக்கமாக இருந்து வியாபாரம் செய்யவேண்டிய கடைக் கொட்டில்கள் போட்டு, அதனால் வரும் வருமானத்தை தர்மகர்த்தா சபைக்குக் கொடுத்து வருகின்றது. சமயச் சொற்பொழிவுகள், இன்னிசை, பண்ணிசைக் கச்சேரிகள் காலத்துக்குக்காலம் இடம் பெறச்செய்து விநாயக அடியார்களின் அன்புக்கும், ஆதரவுக்கும் இடமளித்துள்ளது.

ஆலயத் தொண்டர் சபை

## சித்தன்கேணியில்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில்தேர் உற்சவம் இன்று நடைபெறவிருக்கிறது. காலை எட்டு மணிக்கு விநாயகன், முருகன் வள்ளி தேவயானை சமேதராக தேர்கள் ஏறிப் பவனிவருவார். நாளை தீர்த்தோற்சவம்.

## வீரவேங்கை 'தாமு' நினைவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் வீரவேங்கை தாமு ஞாபகார்த்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

இவ்விழாவில் காலை நிகழ்ச்சிசுளாக 15 மைல் (ஆண்கள்) மரதன் ஓட்டம், 50 மைல் சைக்கிளோட்டம் (ஆண்கள்), 15 மைல் சைக்கிளோட்டம் (பெண்கள்) நடைபெறும்.

இப்போட்டிகளில் தமிழீழப் பகுதிகளிலுள்ள வீர, வீராங்கனைகள் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15 மைல் சைக்கிளோட்டம் (40 வயதிற்கு மேற்பட்டோர் அடையாள அட்டை சமர்ப்பிக்கவேண்டும்). 2 மைல் மரதன் ஓட்டம் (புத்தூர் கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்குள் வசிக்கும் 12 வயதிற்குட்பட்டவர்கள்), 25 மைல் சைக்கிளோட்டம் (புத்தூர் கிராம சபைக்குட்பட்டவர்கள்) ஆகிய போட்டிகளும், பிற்பகல் நிகழ்ச்சிகளாக உதைபந்தாட்டப் போட்டிகளும் பரிசளிப்புவைபவமும் நடைபெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகளின் போது விடுதலைப்புலிகள் பிரமுகர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள். காலை நிகழ்ச்சிகள் புத்தூர் கிழக்கு மாவீரர் ஞாபகார்த்த மண்டப முன்றலில் ஆரம்பமாகும்.

## 48 ஏக்கர் காணி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யியலாளர் எஸ். தயாபரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

நாற்பத்தெட்டு ஏக்கரில் எட்டு ஏக்கர் நெல் விவசாய ஆராய்ச்சி பகுதியாகவும் மிகுதி நாற்பது ஏக்கர் நெல் விவசாய செய்கைக்கும் பயன்படுத்தப்படும். இதன் வருமானம் கிளிநொச்சி விவசாய பீடத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும். (153)

## மேஜர் முரளி ஞாபகார்த்த இரண்டாவது சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்த புதிர்ப் போட்டியின் இரண்டாம் சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் விபரம் வருமாறு:-

தென்மராட்சி - I

உசன் மகாவித்தியாலயம், யாழ்/டிறிபேக் கல்லூரி, யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். யா/நாவற்குழி மகாவித்தியாலயம், யாழ்/மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

தீவகம் - II

மண்டைதீவு மகாவித்தியாலயம், சேர். வை. து. ம. மகாவித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம், டாக்டர் ஏ. தியாகராஜா மகாவித்தியாலயம். நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, நயினாதீவு மகாவித்தியாலயம், சைவப்பிரகாசம் வித்தியாலயம் வேலணை.

வடமராட்சி - III

விக்னேஸ்வராக் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி.

மேற்படி சுற்றுப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலை விபரங்கள் கடந்த 5ம் திகதி ஈழநாடு இதழில் பிரசுரமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் எட்டுப் பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அரசடி வீதியைச் சேர்ந்த கே. சின்னத்துரை (வயது 41) என்பவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த வேணுகோபால் ராமன் (வயது 15) என்பவர் படுகாயமடைந்தார்.

புங்குடுதீவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் என்.யோகம் (வயது 55) என்பவரும் மோட்டார் சைக்கிலில் சென்ற வேறு இருவரும் படுகாயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த உதயகுமார் மயூரன் என்ற 4 வயதுச்சிறுவனும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த அப்புக்குட்டி அசோக்குமார் (வயது 32) என்பவரும் காயமடைந்தனர். சிறுவன் தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வளலாயில் இடம்பெற்றடிராக்டர் விபத்தொன்றில் வளலாயைச் சேர்ந்த காசிப்பிள்ளை தவராசா (வயது 43) என்பவர் காயமடைந்தார்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், (56)

## வடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துவந்ததாகத் திரு. விஜயரத்ன குறிப்பிட்டார். அச்சுறுத்தல்கள் இருக்குமானால் தேர்தல் நடத்துவதில் எந்தவித பிரயோசனமும் இல்லையென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தேர்தல் எப்பொழுது நடத்தப்படும் என்று கேட்கப்பட்டதற்கு பதில் அளித்த அமைச்சர் விஜயரத்ன பாராளுமன்றம் அதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றியதும் தேர்தல் பற்றி தீர்மானிக்கப்படும் என்று சொன்னார்.

## இந்திய-இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய கடற்படைக் கப்பல்களின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று தமிழ்நாடு உள்துறைச் செயலாளர் திரு. ஆர். நாகராஜன் சென்னையில் தெரிவித்தார்.

ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்படுவதால் இந்தப் பகுதியில் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் உதவ முடியும் என்றும் தெரிவித்தார். (கி)

## இரண்டு வருடங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களது பெற்றோருக்கு வந்திருந்தது. தாங்கள் பதினறு நாட்கள் கடலில் தத்தளித்து ஆந்திரப்பிரதேச கடற்றொழிலாளர்களால் காப்பாற்றப் பட்டு இருக்கிறோம் என அதில் தெரிவித்திருந்தார்கள்.

இவர்கள் இலங்கைக்கு வர முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் காப்பாற்றப்பட்ட கடற்றொழிலாளர்களால் இவர்கள் மறைத்து வைக்கப்பட்டு, கூலி இல்லாமல் வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் தம்பிள்ளைகளை 'மீட்டுத் தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இப்பொழுது கேட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (152)

## பத்திரிகையாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் குற்றவாளிகளும் இருக்கின்றார்கள். இருவகையினருமே ஜனநாயகங்களைச் நிலைகுலையச் செய்பவர்கள். இனி மேல் அவர்கள் தகுந்தபடி நடத்தப்படவேண்டும் என்றார்.

சென்ற வாரம் பத்திரிகையாளர் மாநாட்டின்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசு கட்டுப்பாட்டை இழந்துவிட்டதா எனக்கேட்ட பத்திரிகையாளர் ஒருவரைச் சிறைக்குள் தள்ளப்போவதாகத் திரு. ரஞ்சன் விஜேரத்ன எச்சரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கடத்தல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களிலிருந்து இவை பறிமுதல் செய்யப்பட்டன.

முதற் படகில் வந்த மூவரும், இரண்டாம் படகில் வந்த இருவரும் மொத்தமாக ஐந்து பேரும் கடற்படையினரால் அப்போது கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை காங்கேசன்துறை சுங்கப் பகுதி விசேட தடுப்புப் பிரிவினரிடம் படகுகளையும், கடத்தல் பொருள்களையும் சம்பந்தப்பட்ட ஐந்து பேரையும் கடற்படையினர் ஒப்படைத்தனர். சுங்கப் பகுதியினரின விசாரணையின் பின்பு படகுகளும், கடத்தல் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன

படகுகளில் வந்த ஐவரும் தலா ஐயாயிரம் ரூபா பிணையில வடப்பட்டனர். இந்த ஐவரும் யாழ். குடாநாட்டு வாசிகள் ஆவர். (153)

## இளம் புலி தீசனுக்கு இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இலங்கை இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த சின்னத்துரை மனோகரனின் (இளம் புலி தீசன்) நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சுன்னாகம் ஐயனார் கோவிலடி முன்றலில் திரு. இ. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றுவதுடன், கலை கலாச்சாரப் பிரிவின் ''நடந்து வந்த பாதை'' வில்லிசையும் நாடகமும் இடம்பெறும்,

## ஆலங்குடிசோமு காலமானர்

(சென்னை)

பிரபல திரைப் பாடலாசிரியர் ஆலங்குடிசோமு நேற்று சென்னையில் காலமானர். இவருக்கு வயது 64ஆகும். (கி)

## நீர் விநியோகம் அடிக்கடி தடை

(வடமராட்சி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நீர் விநியோகம் அடிக்கடி தடைபட்டு வருகிறது.

மேற்படி ஆஸ்பத்திரியில் உள்ள மோட்டார் இயந்திரங்களின் கோளாறே இந்தத் தடைகளுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (51)

## அபிராமி அந்தாதி இலவச விநியோகம்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேர்த் திருவிழா இன்று நடைபெறுவதையொட்டி அடியார்களுக்கு அபிராமி அந்தாதி இலவசமாக விநியோகிக்கப்படும்.

திரு. கே. அருளானந்தத்தினால் இந்நால் அச்சிடப்பட்டு இலவசமாக இன்று விநியோகிக்கப்படுகிறது.

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மேற்கு ஆத்தியடி விநாயகர் ஆலய 38-வது நாள் மண்டலாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. இன்று மாலை யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் 'விநாயகர் மகிமை'' என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும். (139)

## இன்று பயிற்சி நிறைவு நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவக பிராந்தியங்களின் உழைககும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கான ஊக்குவிப்புக் கலந்துரையாடலும், இரண்டாம்கட்டப் பயிற்சியாளர்களின் பயிற்சி நிறைவு நிகழ்ச்சிகளும் இன்று 7ம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறும்.

இக்கலந்துரையாடல் யாழ். வேம்படி வீதியிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் பிரிவு அலுவலகத்தில் வலிகாமம் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத் தலைவி திருமதி அ. ஏஞ்சலின் சுனித்தா தலைமையில் நடைபெறும். உழைக்கும் மகளிர் நிறுவன உப தலைவி செல்வி க. உமா நோக்கவுரை நிகழ்த்துவார். (57)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா தையல்முத்து

திருநெல்வேலி தெற்கு தாலையடி ஒழுங்கையை சேர்ந்த திருமதி கந்தையா தையல்முத்து அவர்கள் 06 - 06 - 90 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளானந்தம், யோகானந்தம், மணிமேகலை, செல்வராசா, பேரின்பநாயகம், பத்மாவதி, சரோஜினிதேவி, தில்லைநாதன் (கனடா), சற்குணவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, இராசலிங்கம், [ரூபன் ஸ்ரோஸ்), திருநெல்வேலி பங்கஜவல்லி, கமலாதேவி, பற்குணராசா, (கரன் தியேட்டர்] சத்தியநாதன், ரஞ்சிதமலர், வரதராசன் (சாரதி நீர் விநியோகப்பகுதி புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07 - 06 1990 (இன்று) வியாழக்கிழமை, மேற்படி விலாச இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(ஏ-791)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.